www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

வகுப்பு : 6

தேர்வு எண் | | | | | | |

# முதல் பருவம் - தொகுத்தறி மதிப்பீடு (SA)- 2024 - 25

நேரம் : 2.00 மணி] **தமிழ்** [மொத்த மதிப்பெண்கள் : 60

பகுதி - I

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 8x1=8

1. மக்களுக்கு மகிழ்ச்சி தருவது --------
   அ) ஊக்கமின்மை ஆ) அறிவுடைய மக்கள் இ) வன்சொல் ஈ) சிறிய செயல்
2. சார்பெழுத்துகளின் வகைகள் –
   அ) பத்து ஆ) ஐந்து இ) எட்டு ஈ) ஆறு
3. உடல் நோய்க்கு --------- தேவை.
   அ) ஔடதம் ஆ) இனிப்பு இ) உணவு ஈ) உடை
4. சரியான வரிசையில் சொற்கள் அமைந்துள்ள தொடரைத் தேர்க.
   அ) இளங்கோவடிகள் காப்பியத்தை என்னும் இயற்றியவர் சிலப்பதிகாரம்
   ஆ) பறவைகள் இல்லாத உலகில் மனிதன் வாழமுடியாது
   இ) மிகப்பெரிய சாண்டியாகோ மீனைப் பிடித்தார்.
   ஈ) மனிதர் இந்தியாவின் டாக்டர் சலீம் அலி பறவை
5. வேதியுரங்கள் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ---------
   அ) வேதி + யுரங்கள் ஆ) வேதி + உரங்கள் இ) வேத் + உரங்கள் ஈ) வேதி + ரங்கள்
6. அன்பிலார் --------- தமக்குரியர். இத்திருக்குறள் தொடரின் விடுபட்ட சொல்லைத் தேர்க.
   அ) பொய்ப்பின் ஆ) செய்வார் இ) வழியது ஈ) எல்லாம்
7. சிட்டுக்குருவி வாழ முடியாத பகுதி ------
   அ) துருவப்பகுதி ஆ) இமயமலை இ) இந்தியா ஈ) தமிழ்நாடு
8. மனிதர்கள் தங்கள் வேலைகளை எளிதாக்க மிஷின்களைக் கண்டுபிடித்தனர்.
   இத்தொடரில் அடிக்கோட்ட சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல் –
   அ) கணினி ஆ) இயந்திரம் இ) மூளை ஈ) மணி

பகுதி - II பிரிவு - I

II. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். 4x2=8

9. தமிழ் ஏன் மூத்தமொழி என்று அழைக்கப்படுகிறது?
10. பறவைகள் எக்காரணங்களுக்காக இடம் பெயர்கின்றன?
11. 'ரோபோ' என்னும் சொல் எவ்வாறு உருவானது?
12. மனிதர்களுக்கு மருந்தாவது எது?
13. உயிருள்ள உடல் எது?
14. எழுத்துகளுக்குத் தொடக்கமாக அமைவது எது?

பிரிவு - II

எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்க. 6x2=12

15. கலைச்சொல் தருக.
   அ) App அ) Weather
16. தாய்மொழியைப் பாதுகாக்க உங்களின் பொறுப்புகள் இரண்டினை எழுதுக.
17. கபிலன் வேலை செய்ததால் களைப்பாக இருக்கிறான். தொடரைப் பிரித்து இரண்டு தொடர்களாக எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

18. தமிழ் எழுத்துகளுக்குரிய மாத்திரை அளவுகளைக் குறிப்பிடுக.
19. தெளி என்ற அடிச்சொல்லுடன் எழுத்துகளைச் சேர்த்து புதிய சொற்கள் இரண்டினை எழுதுக.
20. சொல்லின் இடையில் மட்டுமே வரும் எழுத்துகள் எவை?
21. மெய்யெழுத்துகளை மூவகை இனங்களாகப் பிரித்து எழுதுக.
22. வரிசை மாறியுள்ள சொற்களை சரியான வரிசையில் எழுதுக.
அ) சுற்றுப்புறத்தை வைக்க தூய்மையாக வேண்டும்
ஆ) இயற்கையைப் வேண்டும் பாதுகாக்க.

பகுதி – III

அடிபிறழாமல் எழுதுக. 2+3=5

23. 'பிறர்க்கு' என முடியும் திருக்குறள்.
24. அ) 'மாமழை போற்றுதும்' – எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.
(அல்லது)
ஆ) 'காணிநிலம்' எனத் தொடங்கி கட்டித்தர வேண்டும் என்பது முடிய உள்ள பாரதியார் பாடலை எழுதுக.

பகுதி – IV

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க. 3x3=9

25. உரைபத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

உலகிலேயே முதன்முதலாக சவூதி அரேபியா ஒரு ரோபோவுக்குக் குடியுரிமை வழங்கியுள்ளது. அந்த ரோபோவின் பெயர் 'சோபியா'. மேலும் ஐக்கிய நாடுகள் சபை 'புதுமைகளின் வெற்றியாளர்' என்னும் பட்டத்தைச் சோபியாவுக்கு வழங்கியுள்ளது. உயிரில்லாத ஒரு பொருளுக்கு ஐ.நா. சபை பட்டம் வழங்குவதும் இதுதான் முதல்முறை.

வினாக்கள்

அ) ஐக்கிய நாடுகள் சபை சோபியாவுக்கு வழங்கிய பட்டத்தின் பெயர் என்ன?
ஆ) உலகிலேயே முதன்முதலாக ஒரு ரோபோவுக்குக் குடியுரிமை வழங்கியுள்ள நாடு எது?
இ) உரைப்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ரோபோவின் பெயர் --------

26. அறிவியல் ஆத்திசூடி பாடலின் கருத்தை உங்கள் சொந்த நடையில் எழுதுக.
27. சமூக வளர்ச்சிக்கும் நீருக்கும் உள்ள தொடர்பு யாது?
28. "அன்புடைமை" அதிகாரத்தின் கருத்துகளை எழுதுக.
29. அஃறிணை, பாகற்காய் ஆகிய சொற்களின் பொருள் சிறப்பு யாது?

பகுதி – V

1x6=6

30. அ) நீங்கள் திருவிழாவிற்கு ஊருக்குச் செல்லவிருப்பதால் இரண்டு நாள்கள் விடுப்பு வேண்டி உங்கள் வகுப்பு ஆசிரியருக்கு விடுப்பு விண்ணப்பம் எழுதுக.
(அல்லது)
ஆ) இயற்கையைக் காப்போம் என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

பகுதி – VI

விரிவாக விடையளிக்க. 2x6=12

31. அ) தமிழ்மொழி படிக்கவும் எழுதவும் எளியது என்பது பற்றி உங்கள் கருத்தை எழுதுக.
(அல்லது)
ஆ) எவற்றுக்குப் புதிய கண்டுபிடிப்புகள் தேவை என்பது பற்றிச் சிந்தித்து எழுதுக.
32. அ) சுதந்திர இந்தியா அடைந்த வெற்றிகளாக அப்துல்கலாம் எவற்றைக் குறிப்பிடுகிறார்?
(அல்லது)
ஆ) கிழவனும் கடலும் என்னும் படக்கதையை உங்கள் சொந்த நடையில் கதையாகச் சுருக்கி எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com